THE WORLD NEEDS THE WORD
IBT

அக்டோபர் 2025
மலர் 24, இதழ் 1

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# பரிபூரணம் (ABUNDANCE)



# பரிபூரணம் (ABUNDANCE)

**சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நீரே; சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே; எங்கள் இதயத்தில் உம்மை போற்றிடுவோம்; என்றென்றும் பணிந்து தொழுவோம்!**

நம் தேவாதி தேவன் யாவற்றையும் படைத்தார் என்பது விவிலியத்தின் ஒரு முக்கியமான நிகழ்வாகும். முதல் நாள் துவங்கி ஐந்து நாட்களும் இந்த உலகத்திற்குரிய சகலத்தையும் படைத்தது மட்டுமின்றி, சகல மிருக ஜீவன்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், எல்லாவற்றிற்கும் சகல பூண்டுகளையும் பரிபூரணமான ஆகாரமாகக் கொடுத்தார். நிறைகுடம் ததும்பாது என்பதற்கு ஏற்ப எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் படைத்தார். ஆறாம் நாளில் மனிதனைப் படைத்தார். இப்பேர்ப்பட்ட கர்த்தர் நம்மை தம்முடைய மக்களாய் பிரித்து, தெரிந்து கொண்டது நமக்கு கிடைத்தப் பாக்கியம். எந்தவொரு குறையும் இல்லாமல் இந்த நிமிடம் வரைக்கும் நல்ல சரீர, சுகம், பெலன், ஆயுளோடு வைத்திருக்கிறார் என்றால் அது மிகப்பெரிய பாக்கியம். தேவனுடைய படைப்பில் யாவற்றையும் ஒரு நொடியில் படைக்காமல் படிப்படியாக படைத்தார் என்பது தெளிவு.

**"சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கிறது (கொ. 1:19). அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்" (யோவான் 1:16).** இயேசு கிறிஸ்துவின் நிறைவினால் அருளின்மேல் அருள் பெற்றோம். தகுதியற்றவரான நிலையில் இருப்பவர்களுக்குக் காட்டப்படும் பரிவு தான் கிருபை. கர்த்தருடைய கிருபை இல்லாமல் எந்த ஒரு மனுஷியோ/மனிதனோ வாழவே முடியாது. நாம் எதற்கும் அவசரப்படக் கூடாது. ஏற்றக் காலத்தில் பரிபூரணமாக நிறைவாகச் செய்பவர் நம் கர்த்தர் ஒருவரே.

அநேக வாக்குத்தத்தங்களை நமக்கு கொடுத்திருக்கிறார். சொல்லிமுடியாத ஈவுகளைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய வாழ்விலே அற்புத அடையாளங்களைச் செய்திருக்கிறார். நம்முடைய மரணப் படுக்கையை மாற்றி போட்டிருக்கிறார். நம்முடைய பாதையைச் செவ்வைப்படுத்தியிருக்கிறார். நல்ல பெற்றோரை கொடுத்திருக்கிறார். எல்லாமே பரிபூரணமாக வைத்திருக்கும் / கொடுத்திருக்கும் நம் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது அன்புள்ள ஜீவியம், மனமாற்றமான வாழ்வு, உண்மையும், உத்தமுமான ஊழியக்காரனாகவும், நற்செய்தி பரப்பும் மக்களாகவும் இருந்தால் கர்த்தர் எவ்வளவு சந்தோஷப்படுவார். எனக்கு வயதாகி விட்டது, என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைக்க வேண்டாம். கர்த்தருடைய ஊழியத்தை/ நற்செய்தி பரப்புவதற்கும்/சொல்வதற்கும் வயது ஒரு காரணமே கிடையாது. 2 இராஜா 5-ஆம் அதிகாரத்திலே நாகமான் வீட்டிலிருந்த ஒரு சிறு பெண் (இஸ்ரவேல் தேசத்திலிருந்து கைதியாக கொண்டு வரப்பட்டவள்) இஸ்ரவேல் தேசத்திலுள்ள தீர்க்கதரிசியைப் பற்றி (சமாரிய தேசம்) நற்செய்தி கூறி, நாகமானுக்கு பரிபூரண சுகத்தை பெற்றுத் தந்தாள். இருக்கும் இடத்திலிருந்தே கர்த்தரிடமிருந்து பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு கர்த்தருக்கென்று நேரத்தை ஒதுக்குவோம். சர்வத்தையும் படைத்த கர்த்தரின் பரிபூரணத்தைப் பற்றி இந்தச் செய்தியில் காணலாம்.

1. பரிபூரணமான வலை
2. பரிபூரணமான காணிக்கை
3. பரிபூரணமான பாத்திரம்

மேலே எழுதப்பட்டுள்ள தலைப்புகளில் முதல் இரண்டு தலைப்புகளும் புதிய ஏற்பாட்டில் இருந்து எடுக்கப்பட்டவை. மூன்றாவது தலைப்பானது பழைய ஏற்பாட்டில் இருந்து எடுக்கப்பட்டவை.

## <u>1. பரிபூரணமான வலை</u>

**இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம் (யோவான் 21:14).**

நம் ஆண்டவராகிய இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின்பு அநேக அற்புதங்களை

(யோ. 20:30) தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். அதிலே மூன்றாவது அற்புத தரிசனம் யோ. 21:11-வது வசனம் தான். இதே மாதிரியான குறிப்பு லூக். 5:1-11 வசனங்களில் காணலாம்.

திபேரியாக் கடல், கலிலேயாக் கடல், கெனசெரேத்துக் கடல் எல்லாவுமே ஒன்றுதான்.

மீன்பிடிக்கும் தொழிலை விட்டு மனிதரைப் பிடிக்கும் உயர்வான தொழிலுக்காக கிறிஸ்துவினால் பிரித்தெடுக்கப்பட்ட பேதுரு (மத். 4 : 18-20) மீண்டும் பழைய தொழிலான மீன் பிடித்தல் தொழிலுக்குப் போகிறார் (யோ. 21: 3). கர்த்தர் அழைத்த அழைப்பினின்று பின்வாங்குதல் சரியல்ல. கலப்பையின் மேல் கைவைத்துவிட்டால் பின்னால் பார்க்கக் கூடாது. ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவன் தன்னுடைய பயிற்சியினால் பரிபூரண வெற்றிபெற வேண்டுமானால் பார்வையானது முன்னோக்கியே இருக்க வேண்டும்.

தம்முடைய **பிள்ளைகளுக்கு** ஆகாரம் கொடுப்பதில் நம் ஆண்டவர் குறைவு வைப்பதே கிடையாது. ஐந்து அப்பம், 2 மீன்களைக் கொண்டு ஐந்தாயிரம் பேரை பரிபூரணமாக போஷித்தார். 7 அப்பங்கள் மற்றும் சில சிறு மீன்களைக் கொண்டு நாலாயிரம் பேரை பரிபூரணமாக போஷித்தார். இப்பேர்பட்ட தேவனால் அழைப்பு பெற்ற பேதுரு பழைய தொழிலுக்கு புறப்பட்டபடியால், மற்ற சீடர்களும் தங்கள் அழைப்பை மறந்து பேதுருவுடன் சென்றனர். பரிபூரணமாக நம்மை வைத்திருக்கும் ஆண்டவருடைய சொல்லுக்கு கீழ்ப்படியாமல் பின்வாங்கிப் போவோமேயானால் நமது வாழ்க்கை பயனற்றதாய் போய்விடும்.

இரவு முழுவதும் வலையைப் போட்டும் சீடர்களுக்கு ஒன்றும் கிடைக்காமல் போனதற்குக் காரணம் அழைப்பை மீறியது. பரிபூரணமான அழைப்பை விட்டுச் சென்றாலும் ஆண்டவர் நம்மீது இரக்கமும், பேரன்பும் கொண்டவராக வருகிறார். கரையில் நின்று கொண்டிருப்பது ஆண்டவர் என்று அறிந்து கொள்ளவில்லை. வலையை இன்ன இடத்தில் போடுங்கள், அப்போது உங்களுக்கு அகப்படும் என்றார் இயேசு. அப்போது திரளான மீன்கள் கிடைத்ததால் வலையை இழுக்க முடியாமல் சீடர்கள் திணறினார்கள். இறுதியில் வலையை கரைக்கு இழுத்து வந்தனர்.

ஆண்டவர் சீடர்களை நோக்கி சாப்பிடுவதற்கு ஏதாகிலும் உண்டா என்று கேட்டபோது, ஒன்றுமில்லை என்று பதில் வந்ததால் இரவிலிருந்து விடியற்காலம் வரை சீடர்கள் ஒன்றுமே சாப்பிடாமல் இருக்கிறார்கள் என்று இயேசு மனம் வருந்தி அவர்கள் வந்து சாப்பிடுவதற்காக அப்பத்தையும், மீனையும் தயார் செய்து வைக்கிறார். யாருக்குக் கிடைக்கும் இந்த பரிபூரணமான ஆகாரம் / பாக்கியம்?

பிள்ளைகளே! என்று அன்போடு சீடர்களை அழைத்த தேவன், நம்மையும் அவ்வாறே அழைக்கின்றார்; நடத்துகின்றார். எந்த சூழ்நிலையிலும் நம்முடைய முயற்சியில் ஆண்டவர் இடைபட்டு வந்தால் தான் எதுவும் வெற்றிகரமாக முடியும். அதற்கு கர்த்தருடைய அருள்/கிருபை தேவை.

நூற்றைம்பத்துமூன்று (153) பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்: இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. (யோ. 21:11)) **பரிபூரணம்.**

பேதுரு தனிமனிதனாக இவ்வளவு கனமான வலையை இழுத்தது, பிற்காலத்தில் அநேக மக்களை ஆண்டவருடைய மந்தைக்குள் கூட்டிச் சேர்த்ததற்குமுன் அடையாளமாகும்.

வலையில் 153 பெரிய மீன்கள் இருந்ததாக விவிலியத்தில் வாசிக்கிறோம். அதற்குமேல் ஒரு மீன்கூட தங்குவதற்கு இடம் கிடையாது. ஆண்டவர் பேதுருவிடம் சொல்லி போடப்பட்ட வலையானது 153 மீன்கள் மட்டும் பிடிபடுவதற்கு கொள்ளளவு கொண்ட **பரிபூரணமான வலை.** அது கிறிஸ்துவால் **பரிபூரணமான வலையானது.** அதற்குப் பின் சீடர்கள் தங்களது குலத்தொழிலை நிரந்தரமாக விட்டுவிட்டு, கர்த்தர் அழைத்த அழைப்புக்கு தங்களை பரிபூரணமாக ஒப்புக் கொடுத்தார்கள்.

“இயேசு-பேதுருவிடம் முதலாவது கூறியது “**என் பின்னே வாருங்கள்**” (மத். 4 : 19). இறுதியாகக் கூறியது, **நீ என்னைப் பின்பற்றி வா** (யோ. 21: 22).

பேதுரு, சபைக்குத் தூணாக விளங்கி யூதரல்லாதோருக்கும் ஆண்டவருடைய நற்செய்தியை எடுத்துச் சென்றார்.

**2. பரிபூரணமான காணிக்கை**

உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்.

காணிக்கையின் அளவு முக்கியமல்ல, காணிக்கையை எந்த உள்ளத்தோடு / மனப்பான்மையோடு கொடுக்கிறோம் என்பது தான் முக்கியம். கர்த்தர் செய்த நன்மைக்கு, நமக்கு காட்டின கிருபைக்கு உளமார நாம் செலுத்தும் நன்றி தான் காணிக்கை. வேதத்திலே எத்தனையோ வகையான காணிக்கைகளைப் பற்றி காணலாம்.

1 நாளா 29-ஆம் அதிகாரத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது கொடுத்த காணிக்கைகளை பட்டியலிட முடியாது. பொன், வெள்ளி, இரும்பு, இரத்தினக் கற்கள், கோமேதகம், மரங்கள் இப்படி கணக்கிலடங்காத அளவுக்கு தாவீது ராஜாவும், ஜனங்களும் கொடுத்தார்கள். எப்படிக் கொடுத்தார்கள்? **உத்தம இருதயத்தோடே, உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்;** மனப்பூர்வமாய் கொண்டு வந்தார்கள் (9வது வசனம்). காணிக்கையை எப்படி கர்த்தருக்குச் செலுத்த வேண்டும் என்று தாவீது ராஜாவிடம் கற்றுக் கொள்ளவேண்டும்.

காணிக்கையை நாம் எப்படி கொடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுலும், கொரிந்து சபையாருக்குக் கூறுகிறார்.

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்... (2 கொரி 9 : 7).**

நாகமான் (2 இராஜா 5 : 15) யோர்தான் நதியில் 7 தரம் மூழ்கி குஷ்டரோகம் நீங்கி சுகமானவுடன் எலிசா தீர்க்கனிடம் முதலாவதாக பேசினான், என்ன பேசினான்?

இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும் என்றான். ஆனால் எலிசா என்ன சொன்னார், கர்த்தரின் கிருபை, இரட்சிப்பு, சுகம் யாவும் இலவசமானவை என்று சொல்லி வாங்க மறுத்து விட்டார் எலிசா.

ஆண்டவராகிய இயேசு பிறந்த போதே குடி மதிப்பு எழுத வந்த ஜனங்களிடமிருந்தும், மேய்ப்பர்களிடமிருந்தும் எத்தனையோ காணிக்கைகள் வந்திருக்கலாம். சாஸ்திரிகள், நட்சத்திரத்தின் துணையோடு குழந்தை இருந்த வீட்டைக் கண்டு சந்தோஷப்பட்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையும், துப வர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அதற்கு காணிக்கையாக வைத்தார்கள் (மத். 2 : 11).

ஒரு சமயம் நம் ஆண்டவர் தேவலாயத்தில் காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். காணிக்கைப் பெட்டியில் பணக்காரர்கள் எல்லாம் அதிகமாய் போட்டார்கள். ஆனால் அங்கே ஒரு ஏழை விதவையும் வந்து இரண்டு காசுகளை தன் கைக்குள் மறைத்து வைத்து போட்டாள். அதைக் கர்த்தருடைய கண்கள் கண்டது. இந்தப் பகுதியானது மாற். 12 : 41-44 மற்றும் லூக்கா 21 : 1-4 வசனங்களிலும் வாசிக்கலாம்.

துட்டு - என்பது ரோமர்களின் வெண்கல நாணயத்தில் மிகவும் சிறியது. காசு என்பது கிரேக்கர்களின் தாமிர நாணயத்தில் மிகச்சிறியது.

எல்லோரும் காணிக்கையை போட்ட பின்பு இயேசுவானவர் தம்முடைய சீஷர்களை அழைத்து காணிக்கைப் பெட்டியில் பணம் போட்டவர்களின் உள்ளத்தைக் குறித்து பேசினார். காணிக்கைப் பெட்டியில் அதிகமான காசு போட்டது அந்த ஏழை விதவைதான் என்று கூறினார். சீடர்கள் உண்மையில் ஆச்சரியப்பட்டிருப்பார்கள். காரணம், எல்லோரும் காணிக்கைப் பெட்டியில் பணத்தைப் போடும்போது பார்த்திருப்பார்கள்.

**ஆண்டவர் என்ன கூறினார்**

ஐசுவரியவான்கள் தங்களிடம் அளவுக்கு மீறிய பரிபூரணம் இருந்ததால் அதிகமாய் போட்டது

பெரிதாகத் தோன்றவில்லை. காரணம், தங்கள் தேவைக்கென்று இன்னும் அதிகமாக வைத்திருந்தனர். ஆனால், இந்த ஏழை விதவையிடம் இருந்ததே பூரணமான அந்த இரண்டு காசு மட்டுமே.

தன் வாழ்க்கைக்குரிய யாவற்றையும் தேவனுக்கு கொடுத்து விட்டாலும் ஐசுவரிய சம்பன்னரான தேவன் தன்னை கடைசி வரை பரிபூரணமாய் ஆதரித்துப் பராமரிப்பார் என்ற பரிபூரண / நிறைவான விசுவாசத்துடன், அந்த விதவை தன் வறுமை நிலைமையிலும் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் காணிக்கைப் பெட்டியில் போட்டுவிட்டாள், என்று இயேசு, சொன்னார்.

உள்ளத்தாலே காணிக்கையை எடுத்து வைத்து ஆலயத்திற்குச் செல்லும் முன்பாகவே தயாராக வைத்துக் கொண்டு போவோமேயானால், அந்த காணிக்கையை கர்த்தர் ஏற்று அதற்கு ஒரு அங்கீகாரம் கொடுப்பார். நமக்கு அதை இரட்டிப்பாகத் திருப்பிக் கொடுப்பார்.

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படிப் பரிபூரணமாக அளந்து நம் மடியிலே போடுவார். நாம் எந்த அளவினால் அளக்கிறோமோ அதே அளவினால் நமக்கும் கர்த்தர் அளப்பார்.

எந்தக் கறையும் இல்லாமல் பரிபூரணமாக, பரிசுத்தமாக வாழ, கர்த்தரின் துணையோடு வாழ தேவன் நமக்கு கிருபை செய்வார்.

**3. பரிபூரணமான பாத்திரம்**

**...பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை (I இராஜா. 17 : 16).**

வேதாகமத்திலே அநேக தீர்க்கதரிசிகளைக் காண்கிறோம். ஒவ்வொரு தீர்க்கதரிசியிடமும் வெவ்வேறு விதமான குணாதிசயங்களைப் பார்க்கிறோம். தேவனோடு அவர்கள் எப்படி ஒருமித்து வாழ்ந்தார்கள் என்று காண்கிறோம். இந்த பரிபூரணமான பாத்திரம் என்ற தலைப்பில் எலியா தீர்க்கதரிசியைப் பற்றிப் பார்ப்போம்.

எலியா செய்த அற்புதம், அடையாளம் இவைகளின் வெற்றியின் இரகசியம் என்னவென்றால் **எலியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நின்றார்** என்பதே.

இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யாத-படியினால் கேரீத் ஆற்றிலே தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, எலியாவிடம் தேவன் பேசி இஸ்ரவேல் தேசத்தை விட்டு வெளியேறி, சாறிபாத் என்னும் ஊருக்குப் போகுமாறு சொன்னார். தம்முடைய தீர்க்கனான எலியாவின் தேவைகளைச் சந்தித்து, எலியாவை பராமரிக்க வசதிபடைத்த மக்கள் மத்தியில் கொண்டு போகாமல் ஒரு ஏழை விதவையின் வீட்டிற்கு அனுப்புகிறார். எலியா அந்த சாறிபாத் பட்டணத்தின் வாசலுக்கு வந்தபோது, விறகுகளை பொறுக்கிக் கொண்டிருக்கும் ஒரு விதவையைக் காண்கிறார். தீர்க்கனாக இருந்தபடியால் தேவன் சொன்ன விதவை இவள்தான் என்று தெரிந்து கொள்கிறார்.

**சாறிபாத் விதவையின் குணநலன்கள்**

அந்தப் பெண் விசுவாசமும், கீழ்ப்படிதலும் உள்ளவளாயிருந்தாள். மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் கர்த்தருடைய தீர்க்கதரிசியின் சொல்லை நம்பினாள். தீர்க்கதரிசி சொன்னதைச் செய்தாள். ஆகவே தான் எலியா, தேவனால் சாறிபாத் விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டா-ரேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை (லூக். 4 : 25, 26).

எலியா அந்த விதவையிடம் முதலில் ஒரு **பாத்திரத்தில்** குடிப்பதற்கு கொஞ்சம் **தண்ணீர்** கொண்டு வா என்றார். இரண்டாவதாக கொஞ்சம் **அப்பம்** உன் கையிலே எனக்குக் கொண்டு வா என்றார். மூன்றாவதாக ஒரு **சிறிய அடையை** பண்ணிக் கொண்டு வா என்று கூறினார்.

**விதவையின் பதில் என்ன?**

தீர்க்கனான எலியா எல்லா இடத்துக்கும் நடந்தே வந்ததால் தாகமும் பசியும் அதிகமாகி இப்படிப் பேசினார். விதவை மறுமொழியாக, எலியாவே என்னிடத்தில் ஒரு பிடி மாவும், கலசத்தில் கொஞ்சம் எண்ணெயுமே தவிர என்னிடத்தில் ஒன்றுமில்லை

என்று கூறினாள். அதிக வறுமையில் நான் இருப்பதால் இந்த மாவில் ஏதாவது செய்து நானும் என் மகனும் சாப்பிட்டு செத்துப் போவதற்கு நான் இந்த விறகுக் குச்சிகளை பொறுக்குகிறேன் என்றாள்.

எலியா யோசித்தார். தன்னைப் **பராமரிக்க** (1 இராஜா 17 : 9) ஒரு விதவைக்கு தேவன் கட்டளையிட்டிருக்கும்போது இந்த விதவையோடு வீட்டில் எந்த ஒரு வசதியும் இல்லாமல், ஆகாரத்திற்கு வழியில்லாமல் தானும், தன் மகனும் செத்துப்போகும் நிலையிலிருப்பதை அறிந்து பின்வருமாறு பேசினார்.

பயப்படாதே, கலங்காதே; திகையாதே. கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையில் மா செலவழிந்து போவதும் இல்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று ஒரு பெரிய வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். தீர்க்கதரிசியின் வாக்கை நம்பி விசுவாசத்தோடு எலியா சொன்னபடி செய்தபடியால் கர்த்தர் அவளையும் அவள் மகனையும் வறுமை-யிலிருந்து காப்பாற்றினார்.

கர்த்தர் சொன்னவாறு ஒரு பிடி மாவாக இருந்த பாத்திரம் பரிபூரண பாத்திரமாக மாறி, பாத்திரத்தில் மாவும், எண்ணெயும் செலவழிந்தோ, குறைந்தோ போகாமல், அந்த விதவையின் குடும்பத்தை இறுதிவரை எந்தவிதக் குறைவும் இல்லாமல் பரிபூரணமாக ஆகாரம் நிரம்பியிருந்தது. எல்லாவற்றிற்கும் காரணம், அந்த விதவை விசுவாசமும்,கீழ்ப்படிதலும் உள்ளவளாயிருந்தாள்.

எலியாவிடம் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட எலிசாவைப் பற்றி பார்ப்போம். இங்கேயும் ஒரு விதவையைக் காண்கிறோம். இந்த விதவைக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். தீர்க்கதரிசி மரிக்கும் முன் கடன் வாங்கியிருந்தார். அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதற்குள் மரித்துப் போய் விட்டான்.

கடன் அதிகமாகி, அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் தன்னையும், தன் குடும்பத்தையும் அடிமைகளாக விற்றுப் போடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. அந்த நிலைமை இந்த விதவைக்கு வந்தது. தன்னுடைய மகன்களை கடன் கொடுத்தவர்களிடம் விற்க வேண்டிய நிலைமை வந்தது. அந்தப் பெண் தேவனுடைய மனுஷனான எலிசாவிடம் தன் குடும்பத்தின் நிர்ப்பந்தமான நிலையை எடுத்துக் கூறினாள்.

எலிசா அந்தப் பெண்ணை நோக்கி, வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அந்தப் பெண் ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் .... வேறொன்றும் இல்லை என்றாள்.

நல்ல சமாரியன் நிகழ்ச்சியில் குற்றுயிராய் இருந்த அந்த மனிதனின் காயங்களுக்கு எண்ணெய் போட்டு கட்டி ... அவனைப் பராமரித்தான் என்று பார்க்கிறோம் (லூக். 10 : 34). சவுலை ராஜாவாக அபிஷேகம் செய்ய சாமுவேல் தீர்க்கதரிசி (1 சாமு. 10 : 1) தைலக் குப்பியை எடுத்து அவன் தலையின் மேல் வார்த்து.... இஸ்ரவேலின் முதல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். ஆறாத காயங்கள், எலும்பு முறிவு விரைவில் ஒன்றுகூட எண்ணெய் மிகவும் அவசியம். எண்ணெய் அபிஷேகத்தைக் குறிக்கிறது.

கர்த்தர் இன்னும் அற்புதங்களைச் செய்கிறார். ஏனெனில் அவர் என்றுமே மாறாதவர். நம்மிடம் உள்ள ஒரு சிறு காரியங்களைக் கொண்டு பெரிய அற்புதத்தைச் செய்ய கர்த்தரால் கூடும்.

<u>எலிசா கூறிய பதில் என்ன?</u>

**...நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களை கேட்டு வாங்கு (2 இராஜா. 4 : 3).**

*Then he said, ‘Go, borrow thee vessels abroad of all thy neighbours, even empty vessels; borrow not a few’ (2 king 4 : 3).*

தாயும், பிள்ளைகளும் ஒரு நிமிடம் யோசித்திருப்பார்கள். ஆனால் நடக்கப் போகும் அற்புதத்தையும் அதிசயத்தையும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள். கர்த்தருடைய கரம் குறுகிப் போய்விடவில்லை. தாயும், மகன்களும்

ஒரு வார்த்தை கூட பேசாமல் முதலாவதாகக் கீழ்ப்படிந்தார்கள். விசுவாசத்துடன் அண்டை, அயலார் வீட்டிற்குச் சென்று அநேக வெறும் பாத்திரங்களை இரவலாக வாங்கி வந்து தன் வீட்டிற்குள் வைத்தார்கள்.

அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் எண்ணெயை வார்த்து நிறைந்த பாத்திரங்களை ஒரு பக்கமாக வை என்றான் (2 இராஜா 4 : 4).

எலிசா சொன்னவாறு ஒரு மகன் பாத்திரத்தைக் கொடுக்க தாய் ஒவ்வொரு பாத்திரமாக ஊற்றி நிறைத்தாள். மற்றொரு மகன் எண்ணெய் நிறைந்த பாத்திரத்தை ஒரு பக்கமாக எடுத்து வைத்தான். காலியான பாத்திரங்கள் பரிபூரணமாக எண்ணெயால் நிரம்பியவுடன் எண்ணெய் நின்றுபோனது. இந்த அற்புதத்தை தாயும், மகன்களும் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கிப் போயிருப்பார்கள். அதே சமயம் தீர்க்கதரிசியின் பிள்ளைகளாகவும், மனைவியாகவும் இருந்தக் காரணத்தினால் இது கர்த்தர் செய்த அற்புதம் என்று நினைத்து நன்றி செலுத்தியிருப்பார்கள்.

தீர்க்கனுடைய வார்த்தைக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து, பரிபூரணமான எண்ணெய் பாத்திரங்களை விற்று, தன் கணவன் பட்டக்கடனை பரிபூரணமாக கட்டி முடித்தாள். மீதியிருந்த பணத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்துவதற்கு வைத்துக் கொண்டாள்.

கர்த்தரின் பெரிதானக் கிருபையினால் கடன் அடைக்கப்பட்டது. அடிமைகளாக விற்கப்படவிருந்த மகன்களும் காப்பாற்றப்பட்டனர். வறுமையிலிருந்த குடும்பம் சந்தோஷப்பட்டு குடும்பத்தை நிர்வாகம் பண்ண பணமும் கிடைத்தது. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. எல்லாவற்றிற்கும் காரணம், மூன்று பேரிடமும் காணப்பட்ட விசுவாசமும் கீழ்ப்படிதலுமேயாகும்.

பரிபூரணமான வலையில் நாம் காண்பது கர்த்தர் நம்மை எப்படி வைத்திருக்கிறார் என்றால் இடம் கொள்ளாமல் போகுமட்டும் நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று கூறின வாக்குத்தத்தின்படி பரிபூரணமாக நிறைத்தார் அந்த வலையை. சீடர்கள் அவ்வாறே பரிபூரணமாக மனம்மாறி மீன் பிடித்தல் தொழிலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு கர்த்தருடைய மந்தையில் ஆடுகளை சேர்க்கும் வேலைக்காக பரிபூரணமாகத் தங்களை ஒப்புக் கொடுத்து ஆண்டவருக்குப் பின் சென்றார்கள்.

பரிபூரணமான காணிக்கையில் நாம் என்ன காண்கிறோம் என்றால், நாம் யாருக்கு எதைச் செய்தாலும், கர்த்தர் நம்மைக் காண்கிறார் என்ற தேவபய உணர்வு நம்மிடத்தில் இருக்க வேண்டும். காணிக்கை செலுத்துதல் என்றால் **நன்றி படைப்பைக்** குறிப்பதாகும். கர்த்தர் மலைப் பிரசங்கத்தில் மத். 6 : 3-இல் அருமையான வசனம் ஒன்றைக் கூறினார். உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது. எதைச் செய்தாலும் அந்தச் செயலைக் கர்த்தர் மட்டும் பார்த்தால் போதும். அடுத்தவர்கள் பார்க்க வேண்டும் என்றோ, பார்க்குமாறு செய்ய வேண்டும் என்றோ நினைக்கக் கூடாது. அப்போது பரிபூரணமான கிருபையால் கர்த்தர் நம்மைச் சூழ்ந்து காத்துக் கொள்வார்.

இறுதியாக எலியா, எலிசா இரண்டு தீர்க்கன்களுமே அநேக அற்புத அடையாளங்களைச் செய்திருக்கிறார்கள். அரசருக்கும், மக்களுக்கும் முன்பாக பகிரங்கமாக சவால் விட்டவர் (கர்மேல் பலிபீடம்) எலியா. ஊழிய அழைப்பை உடனடியாக ஏற்றுக் கொண்டு எலியாவை பின்பற்றியவர் எலிசா. இரண்டு தீர்க்கன்களின் ஊழியமும் சிறப்பானதாக, பரிபூரணமாக நடைபெற்றதற்குக் காரணம், இஸ்ரவேலின் தேவனுக்கு முன்பாக நின்று அவர் சொற்படி நடந்ததுதான்.

நம் வாழ்க்கையும் பரிபூரணமாக நிறைந்து காணப்பட வேண்டுமானால், எந்தச் சூழ்நிலையிலும் சர்வ சிருஷ்டிக்கும் எஜமானரின் முன் நிற்போமாக! ஆமென்.

**– சகோதரி. பேர்ல் குயில்ராஜா**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

**நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் (எசே. 22:30).**

யோபுவின் சரித்திரத்தைக் குறித்து வாசிக்கும் பொழுது, கர்த்தர் யோபுவையும், அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைந்திருந்தார் என்று வாசிக்கிறோம். அதனால் யோபுவையும் அவனுக்கு உண்டான எதையும் சாத்தானால் தொட முடியவில்லை. உன்னதப்பாட்டில் வாசிக்கும் பொழுது "நீ அடைக்கப்பட்ட தோட்டமாயிருக்கிறாய்" என்று இருக்கிறது. தோட்டம் ஏன் அடைக்கப்பட வேண்டும்? அது அடைக்கப்படவில்லை என்றால் குழி நரிகளும், சிறுநரிகளும் தோட்டத்தை கெடுத்துப்போட்டுவிடும். எரிகோ பட்டணத்திற்கு அதின் மதில்களே பலம்: அதைத்தாண்டி ஒருவரும் அதை மேற்கொள்ள முடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் ஏழு நாட்கள் மதிலைச் சுற்றிவந்த பின்புதான் கர்த்தர் மதிலை இடித்து விழப்பண்ணினார். அதற்கு பின்புதான் அவர்கள் அந்தப் பட்டணத்தை மேற்கொள்ள முடிந்தது.

அதைப்போல் ஒரு தேசத்தையோ, பட்டணத்தையோ, குடும்பத்தையோ அல்லது தனிப்பட்ட ஒரு மனிதனையோ கர்த்தருடைய கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும்வரை, சாத்தானால் எதையும் செய்ய முடியாது. கர்த்தருடைய கட்டளையை மீறி பாவம் பெருகும்பொழுது அவர்களுடைய பாதுகாப்பான மதிலில் திறப்பு உண்டாகும். அதின் வழியாய் சத்துரு உட்பிரவேசித்து தேசத்தையோ அல்லது அந்தக் குடும்பத்தையோ அவனால் சேதப்படுத்த முடியும். இஸ்ரவேல் ஜனங்கள் அநேகமுறை கர்த்தரை விட்டு விலகி, அவருக்கு விரோதமாய் பொல்லாத பாவங்களை செய்தபொழுது அவர்களை எதிரி நாட்டு ராஜாக்கள் கையிலே ஒப்புக் கொடுத்தார். அல்லது கொள்ளை நோய்களாலும், பஞ்சத்தாலும் அழித்தார். இப்படிப்பட்ட நேரங்களில் தேசம் அழியாதபடிக்கு, தேசத்திற்காகவும் அதின் பாவங்களுக்காகவும் தேவனிடத்தில் மன்றாடி ஜெபிக்கிற ஆட்களை கர்த்தர் தேடுகிறார்.

ஆபிரகாமின் நாட்களில், சோதோம் கொமோரா என்ற பட்டணங்களின் கொடிய பாவத்தினிமித்தம் அதை அழிக்க கர்த்தர் சித்தமானார். ஆபிரகாம் அதற்காக மன்றாடி ஜெபித்த பொழுது, லோத்தின் குடும்பம் அந்த அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது.

இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்திர யாத்திரையில், மோசே கர்த்தரிடம் ஜனங்களுக்கு கொடுக்க கற்பலகைகளையும், நியாப்பிரமாணத்தையும், வாங்க மலையின்மேல் ஏறிப்போய் 40 நாள் தேவனோடிருந்தான். மோசே வர தாமதமாகிறதைக் கண்டு ஜனங்கள் ஆரோனிடம் மோசேக்கு என்ன சம்பவித்ததோ தெரியவில்லை ஆதலால் நீர் எங்களுக்கு முன் செல்லும் தெய்வத்தை உண்டுபண்ணும் என்று சொன்னார்கள். ஆரோன் அவர்களுக்கு பொன்னினாலான கன்றுகுட்டியை வார்ப்பித்துக் கொடுத்தான். ஜனங்கள் அதை வணங்கி அதற்குப் பலியிட்டார்கள். அந்த பாவத்தினிமித்தம் கர்த்தர் அவர்களை அழித்துப் போடுவேன் என்றார். மோசே அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலில் நின்று ஜெபித்தார். அதைப்போல் இயேசு கிறிஸ்துவும், நம்முடைய பாவங்களினிமித்தம் நாம் அழியாதபடிக்கு

பிதாவினிடத்தில் நமக்காய் பரிந்து பேசுகிறார். அழியாதபடிக்கு பிதாவினிடத்தில் நமக்காய் பரிந்து பேசுகிறார்.

எசே. 9 : 4-இல் **கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் “போடு” என்றார்.** அடையாளம் இல்லாத ஜனங்களையெல்லாம் சங்காரம் பண்ணும்படி கட்டளையிட்டார். தேசத்திற்காக ஜெபிக்கிற பிள்ளைகளை, கடைசி நாட்களில் நடக்கிற அழிவுகளிலிருந்து கர்த்தர் காப்பார்.

கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாமும், நம்முடைய தேசத்தின் பாவத்திற்காகவும், ஜனங்களுடைய இரட்சிப்பிற்காகவும் இயேசு கிறிஸ்துவினிடத்தில் மன்றாடி ஜெபிக்க வேண்டும். “**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**” (யாக். 5:16).

கடந்த மாதம் உத்தரப்பிரதேசத்திலிருந்து போஜ்புரி மொழிபெயர்ப்பாளரும், ஒடிஷா மாநிலத்திலிருந்து மிர்கான், கலகாண்டியா மற்றும் தெஷியா மொழிபெயர்ப்பாளர்களும் கோவை IBT மையத்திற்கு வந்து, ஆகஸ்ட் மாதம் 4-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை பழைய ஏற்பாடு புத்தகங்களின் பணிகளைச்செய்தார்கள். அச்சமயம் வந்திருந்த BSI Rev. Dr. சுப்ரமணியம் அவரிடம் சில ஆலோசனைகளைப் பெற்றார்கள். இதே மாதம் 11-ஆம் தேதியிலிருந்து 16-ஆம் தேதி வரை மத்தியப்பிரதேசத்திலிருந்து வந்திருந்த பண்டேலி மொழிபெயர்ப்பாளர் சகோதரி. தேவேஷ்குமாரி புதிய எற்பாடு பகுதியில் Rev. சுப்ரமணி அவர்களின் ஆலோசனைப்படி சரிபார்ப்புப் பணியைச் செய்தார். இந்த மொழியில் புதிய ஏற்பாடும் மேலே குறிப்பிட்டுள்ள 4 மொழிகளில் வேதாகமமும் அடுத்த லோகோஸ் முகாமில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதே மாதம் 10-ஆம் தேதியன்று கோவை பீளமேடு TELC சபை காலை ஆராதனையில் சகோ. சைமன் அவர்கள் தேவ செய்தியும், திருமதி. நவமணி சேகர் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். இதே மாதம் 24-ஆம் தேதியன்று திருப்பூர் St. Paul’s ஆலயத்தில் திருமதி. சுஜானா அவர்கள் தேவ செய்தியும், சகோ. ராஜகுமார் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். இந்நாளில் இவ்வருடம் IBT மூலமாக 4 புதிய ஏற்பாடு புத்தகங்கள் வெளியிடத் திட்டமிட்டுள்ளதால், அச்சிடும் பணிக்கான தேவையை சபை மக்களுக்கு சிறிய கைப்பிரதி மூலம் தெரியப்படுத்தியவுடன் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்தார்கள். சந்தர்ப்பம் அளித்த சபை ஆயர், செயலர், பொருளர் மற்றும் பங்குபெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறது. இரண்டு ஆராதனைகளிலும் பங்கு பெற்ற சபை மக்களையும், பயனுள்ள தேவசெய்தியளித்து, சபை மக்களை உற்சாகப்படுத்திய திருமதி. சுஜானா ராஜா அவர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும், IBT மூலமாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ள பணிகள் தடையின்றி முடிக்கப்படவும், தொடர்ந்து ஜெபியுங்கள். படித்து முடித்த பத்திரிகையை பிறருக்கு அறிமுகப்படுத்தி, அவர்களும் பயன்பெறச் செய்யுங்கள். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் அனுதினமும் பாதுகாத்து ஆசீர்வதிப்பாராக!

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்,
**K. ஜெய்சிங்**

## பொன்மொழிகள்

★ பல தலைமுறைகள் உங்களை வாழ்த்தும்படி உங்கள் தலைமுறையில் வாழ்ந்து காட்டுங்கள்.
★ முதலில் நற்செய்தியைப் படித்துவிட்டு பின்பு, நாள் செய்தியைப் படியுங்கள்.
★ பூவிற்கு வாசம் தேவை; மனித வாழ்விற்கு விசுவாசம் தேவை.
★ சந்தேகம் தடையைப் பார்க்கிறது; விசுவாசம் தடயங்களைப் பார்க்கிறது.
★ இல்லாமை என்பது இயற்கை; இயலாமை என்பது செயற்கை.
★ எரிகிற விளக்குத்தான் இன்னொரு விளக்கை எரிய வைக்க முடியும்.
★ நோக்கமில்லாத வாழ்க்கையும், வாசனையற்ற மலரும், இரண்டுமே வீசி எறிய வேண்டியவைகள்.

# பணித்தளச் செய்திகள்

**மிஷனெரி : சகோ. சந்திரிகாதாஸ்**
**பணித்தளம் : பிந்திரா (உத்தரப்பிரேதசம்)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக காங்பூர், கங்காவா, சுரேரி பஜார், பர்சஹானி, மரியகு, சில்பியா, பச்சவ்ரா, காச்சியா, ராமாய்பட்டி, ஜலால்ப்பூர், சுபேபூர், லகோங்பூர், கர்தஹா, உதய்சன்பூர், சமோகர், நய்பஸ்தி, தனேரம்பூர், ஷிவலே தர்சவானா, ரதன்பூர், பரேபூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று, கைப்பிரதிகளை விநியோகித்து, நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். இதில், சகோ. பால் பிரவ்வபதி, குஷகல்ராம், திருமதி. பிரவதிதேவி, சரோஜா தேவி, நிர்மலா தேவி, பிரபாவதி ஆகியோர் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள்.

ஞாயிறு ஆராதனை பிந்திரா பணித்தளத்திலும், 2-வது சனிக்கிழமை உபவாச ஜெபக்கூட்டமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 100 பேருக்கு குறையாமல் ஞாயிறு ஆராதனையில் பங்கு பெறுகிறார்கள். இச்சபை வளர்ச்சிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

**முன்னேற்றப் பணியாளர் : சகோ. ராமலிங்கம்**
**பணித்தளம் : கோத்தகிரி (நீலகிரி)**

இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மார்ச் 11-ஆம் தேதியில் நிகழ்ந்த விபத்தில் இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்டு, சிகிச்சைப் பெற்று, கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு விரைவில் பூரண சுகம் கொடுத்து, பழைய உற்சாகத்துடன் என் பணியை தேவ நாம மகிமைக்காக செய்யும்படி அருள்புரிந்துள்ளார். அவருக்கே துதி, கனம் மகிமையுண்டாவதாக. மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நாட்களில் IBT-இன் நிர்வாகிகள் உதவிக்கரம் கொடுத்தது, பேருதவியாக இருந்தது. இதுமட்டுமின்றி, மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனவுடன், மேட்டுப்பாளையத்தில் முன்னேற்றப் பணியாளர் தங்கியிருந்த வீட்டையும் எனக்குக் கொடுத்து, 4 மாதங்கள் அங்கு தங்கியிருப்பதற்கும் IBT பொருளாளர் உதவியதை மறக்க முடியாது. மேலும் IBT தாங்குநர்கள், மருத்துவமனையில் இருந்த நாட்களிலும், மேட்டுப்பாளையத்தில் தங்கியிருந்த போதும் நேரில் விசாரித்து, என் சுகத்திற்காக ஜெபித்துச் சென்றார்கள். அனுதினமும் என் சுகத்திற்காக IBT-யைச் சார்ந்தவர்களும், உறவினர்கள், தாங்குநர்கள் அனைவரின் ஜெபத்தின் பலனாக மருத்துவர் வியப்படையும்படியாக 4 மாதத்திற்குள் கர்த்தர் நல்ல சுகத்தை அருளிச் செய்தார். என் மூலமாக IBT ஊழியத்திற்கு கிடைத்த காணிக்கை தடைபடாமல் இருக்க, என் இரு மகன்களும், என் மனைவியும் தொடர்ந்து முன்னேற்றப் பணியைச் செய்து, காணிக்கை குறையாமல் வாங்கி வந்து ஊழியத்திற்கு உதவினார்கள். அந்நாட்களில் புதிய குழந்தைத் தாங்குநர்களையும் இணைத்தது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. என்னுடைய பணியை தொடர்ந்து உற்சாகத்துடன் செய்யவும் மேலும் முன்னேற்றம் காணவும் ஜெபியுங்கள்.

---

**மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :**
**சகோ. K. சாமுவேல்**
**மொழி : வெள்ளியங்காடு இருளா**
**பணித்தளம் : வட்டலக்கி (கேரளா)**

கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!

கடந்த மாதம் வேதாகம மொழிபெயர்ப்புப் பணியில், புதிய ஏற்பாடு புத்தகத்தில் லூக்கா 13-ஆம் அதிகாரம் முதல் 24 வரையிலும், யோவான் 1 முதல் 19 வரையிலும் மறுபடியும் வாசித்து சரிபார்க்கப்பட்டது. மேலும்

வெள்ளியங்காடு, ஆலங்கண்டி, கோப்பளாரி ஆகிய கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்ட சங்கீதம் நீதிமொழிகள் புத்தகத்தை அவர்கள் உபயோகப் படுத்துகிறார்களா எனவும், அதை உபயோகப்படுத்த அறிவுறுத்தியும் வந்தோம். இருளா மொழியிலுள்ள புதிய நியம என்ற புதிய ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருளா ஜனங்கள் அதிகபட்சமாக போதை பொருளுக்கே அடிமைகளாக இருக்கின்றனர். வாலிபர் முதற்கொண்டு இந்நிலையில் சிக்கியுள்ளனர். இவர்கள் இப்பாவத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

வெந்தபட்டி என்ற கிராமத்தில் ரமேஷ் என்ற வாலிபன் பிசாசின் பிடியில் சிக்கி வேதனைப்படுகிறான். அவனுக்காக நாங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். அந்த சகோதரன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை அடையவும், விசுவாசத்தில் வளரவும் இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவுக்காக வாழ, ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

---

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. S.N. சங்கர்</u>
<u>மொழி : சௌராஷ்ட்ரா</u>
<u>பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)</u>

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

கடந்த ஜூலை மாதம், சிறுவர் வேதாகமக் கதைகளை சௌராஷ்ட்ரா மொழியில் மொழிபெயர்த்தேன். அவை: இஸ்ரவேல் இராஜ்யம், சவுலின் ஆட்சி, சவுலின் வீழ்ச்சி, அம்மோனியரின் அநீதியான பலி, தாவீது சவுலின் உயிரைக் காப்பாற்றுதல், தாவீதும் அபிகாயிலும், சவுலின் மரணம்.

மேலும் நான் பிலிப்பியர் புத்தகத்தை தமிழ் மற்றும் சௌராஷ்ட்ரா மொழிபெயர்ப்புகளில் படித்து, தெளிவான மற்றும் துல்லியமான மொழிபெயர்ப்பு வசனங்களைப் பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொண்டேன்.

மேலும், ஜூலை 2-ஆம் தேதி மதுரையில் சௌராஷ்ட்ரா விசுவாசிகளுக்கான கூட்டம் நடத்தப்பட்டது. அதில் 25 பேர் கலந்து கொண்டனர். அங்கு பிலிப்பியர் புத்தகத்தை சௌராஷ்ட்ரா மொழியில் வாசித்து, சௌராஷ்ட்ரா வேதாகம மொழிபெயர்ப்புக் குறித்து ஆலோசனை செய்தோம். மேலும் சௌராஷ்ட்ரா மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள சில சௌராஷ்ட்ரா குடும்பங்களுக்கு நற்செய்தி அறிவித்தோம். நற்செய்தியைக் கேட்ட மணி, உதய், சுபு, ஹரி, சரவணன், லீலா, லக்சுமி, ராஜா ஆகியவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும், ஒட்டன்சத்திரத்தில் நடந்த ஓய்வுபெற்ற மிஷனெரிகளுக்கான கூட்டத்திலும் கலந்து கொண்டேன். எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

<u>மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :</u>
<u>சகோ. பீத்தாம்பர் மஹநந்</u>
<u>மொழி : கலகாண்டியா</u>
<u>பணித்தளம் : லடுகன் (ஒடிஷா)</u>

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த மாதத்தில் தேவனுடைய கிருபையால், நான் தேவ ஊழியத்தில் பாதுகாப்பாகச் செயலாற்றினேன். மொழிபெயர்ப்பாளராக, பாராடெக்ஸ்ட் மென்பொருளில், நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல் புத்தகங்களுக்கான திருத்தப் பணிகளையும், சரிபார்ப்புகளையும் கவனமாகச் செய்தேன். மேலும் சங்கீதம் 91 முதல் 150 வரை உள்ள பகுதிகளுக்கு தலைப்புகள், ஆசிரியர் பெயர்கள், இசைக்கருவிகளின் பெயர்கள் இடும் பணிகளையும் மேற்கொண்டேன்.

இந்தப் பணிகளுக்கு அப்பாலும், சுவிசேஷப் பணியிலும் ஈடுபட்டேன். நான் மூன்று கிராமங்களுக்குச் சென்று, என் மொழி பேசும் மக்கள் குழுவைச் சந்தித்து, அவர்களிடம் சுவிசேஷத்தை அறிவித்தேன். அவர்கள் சுவிசேஷத்தை கவனமாகக் கேட்டு, அதில் விசுவாசம் வைத்தனர். எனவே, அவர்களுக்கும்

அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கும் ஜெபித்தேன். நான் சந்தித்த கிராமங்கள் : தாஸ்பூர், நாக்பேரே, பைரோமல். அங்கிருந்த மக்கள் : மனதர், தரிராம், அம்ருதா, தௌனி, ஹ்ருஷம், நாதம், கோபா, பிரதிக், மாதன், கௌஸ்தப், திகம், ஜெய்ராணி.

12.07.2025 அன்று உபவாச ஜெபக்கூட்டத்தை நடத்தினேன். அதில் நமது IBT-இன் எல்லா மொழிபெயர்ப்பு ஊழியத்திற்கும், இணை நிறுவனர், தலைவர், செயலாளர், பொருளாளர், பிரதிநிதிகள், தாங்குநர்கள், ஊழியர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் அனைவருக்காகவும் ஜெபித்தோம். மேலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எனது பணித்தளத்தில் ஞாயிறு ஆராதனை நடத்தப்படுகிறது. என் ஊழியத்திற்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

--------------------

<u>மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :</u>
<u>சகோ. பரமேஷ்ஷப்பா</u>
<u>மொழி : லம்பானி</u>
<u>பணித்தளம் : ஷிர்லகோப்பா (கர்நாடகா)</u>

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள்.

கடந்த மாதம் என் மொழிபெயர்ப்புப் பணியில் சங்கீதம் 1 முதல் 45 வரை உள்ள பகுதியில் மொழித்திருத்தம் செய்யப்பட்டது. என் மிஷனெரி பணியில், நான ராதனாஹக், கலம்மா, தாயம்மா ஆகிய நபர்களைச் சந்தித்து, லூக்கா 10 : 19 மற்றும் ஆதியாகமம் 39 : 1 ஆகிய வசனங்களின் அடிப்படையில் தேவ வார்த்தையைப் பகிர்ந்தேன்.

மேலும் லம்பானி மக்களையும் சந்தித்து, அவர்களிடம் சுவிசேஷத்தை அறிவித்து, கைப்பிரதிகளையும், புதிய ஏற்பாட்டையும் விநியோகித்தேன். லம்பானி மக்களின் இரட்சிப்பிற்காகவும், என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. M. ராபர்ட்</u>
<u>பணித்தளம் : மேட்டுப்பாளையம் & கோயம்புத்தூர் (தமிழ்நாடு)</u>

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக!

கர்த்தருடைய கிருபையால் இரண்டு ஆண்டுகாலமாக கோவை IBT-இல் அலுவலகப் பணிகளையும் மற்றும் மேட்டுப்பாளையத்தில் முன்னேற்றப் பணிகளைச் செய்யவும் இவ்வூழியத்தோடு இணைந்து பணியாற்றவும் கர்த்தர் நல்ல வழிகளை ஏற்படுத்தித் தந்தார். மேட்டுப்பாளையத்தில் முன்னேற்றப் பணிகளை செய்யும் போது கர்த்தர் பாதுகாப்பான பிரயாணத்தை தந்தார். அநேக தாங்குநர்களைச் சந்திக்கவும், ஜெபிக்கவும் அவர்களிடம் இருந்து காணிக்கை பெற்றுக் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார். நான் பெலவீனப்பட்ட நாட்களில் என்னை விசாரிக்கவும், மருத்துவ தேவைக்காக கொடுக்கவும், ஜெபிக்கவும் செய்தமைக்காக கர்த்தருக்கும், IBT ஊழியத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து மனதார நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தருடைய கிருபையால் CSI தென்னிந்திய திருச்சபையின் கோவை திருமண்டலத்தில் இறைப்பணி செய்வதற்கு, DBM ஊழியத்திற்கு செல்ல இருப்பதனால் அதற்கென்று நான் என்னை ஆயத்தப்படுத்தியுள்ளேன். என்னால் முயன்ற மட்டும் IBT ஊழியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கவும், இதோடு பலனளிக்கவும் அவர்களை ஊக்கப்படுத்துவேன். எனக்காகவும், என்னுடைய குடும்பத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர் தாமே நம் அனைவரோடும் இருப்பாராக, ஆமென்.

--------------------

# உலகச் செய்திகள்

★ குரூப் 1 பணிகளுக்குத் தேர்வான 89 பேருக்கு பணி நியமன உத்தரவுகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்வு தலைமைச் செயலகத்தில் திங்கட்கிழமை (25.8.2025) நடைபெற்றது.

★ பாதுகாப்புத் துறையில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும், ஃபிஜியும் தீர்மானித்துள்ளன.

★ பாகிஸ்தானில் பிறந்த கிறிஸ்தவரான பிரெண்டன் வெலன்டைன் கிரேஸ்டோ (44), 19 ஆண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு, இந்தியக் குடியுரிமை பெற்றார். பனாஜியில் திங்கட்கிழமை (25.8.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவா முதல்வர் பிரமோத் சாவந், குடியுரிமைக்கான சான்றிதழை அவருக்கு வழங்கினார்.

★ குடியரசுத் துணைத் தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணன் தேர்வு.

★ ஆப்ரேஷன் சிந்தூர் : 400 விஞ்ஞானிகள் இரவு பகலாக பணியாற்றியதாக இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் தெரிவித்தார்.

★ பிரான்சின் புதிய பிரதமராக செபாஸ்டியன் லெக்கோர்னுவை அந்நாட்டு அதிபர் இமானுவேல் மேக்ரான் நியமித்தார்.

★ மத்திய அரசின் கல்வித் துறையால் வழங்கப்படும் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தமிழகத்தில் சென்னை, உடுமலை, ஆசிரியைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் (தேசிய விருதுக்கு தேர்வு பெற்றுள்ள ரேவதி பரமேஸ்வரன், விஜயலட்சுமி). இதேபோல, புதுச்சேரி தில்லையாடி வள்ளியம்மை அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் வி. ரெக்ஸ் (எ) ராதாகிருஷ்ணனும் இவ்விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்



திருநெல்வேலி KTC நகரில் வசித்து வந்த IBT-இன் மூத்த பிரதிநிதி திரு. S. செல்லையா அவர்கள் தன்னுடைய 76-வது வயதில் கடந்த 17.08.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.



பாளையங்கோட்டை ராஜேந்திர நகரில் வசித்து வந்த IBT-இன் மூத்த பிரதிநிதி திருமதி. மகிளா காலின்ஸ் அவர்கள் தன்னுடைய 54-வது வயதில் கடந்த 01.09.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர்கள் இருவரையும் பிரிந்து, துயரத்திலிருக்கும் இரு வீட்டாரின் குடும்பத்தினருக்கு கர்த்தர் பரத்திலிருந்து ஆறுதலும், சமாதானமும் கொடுக்கவும், இரு குடும்பத்தாரும் தொடர்ந்து கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படியாக வாழ்ந்து, ஆசீர்வதிக்கப்பட ஜெபிக்கிறோம்.

– இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்

# எமது தரிசனமும், எமது பணியும்

**எமது தரிசனம் :** **"இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**எமது பணி :** கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.

# அப்போஸ்தலர்கள் இரத்த சாட்சியாக மரித்த விபரங்கள்

எல்லா அப்போஸ்தலர்களுமே இரத்த சாட்சியாக மரித்தார்கள். தங்களது நம்பிக்கையையும் சாட்சியையும் தங்களது இரத்தத்தினால் முத்திரை பதித்துவிட்டுத்தான் இந்த உலகத்தைவிட்டு கடந்து போயிருக்கிறார்கள்.

'ஷு மேக்கர்' என்ற சரித்திர ஆசிரியர் இதை இப்படியாக தொகுத்து விளக்குகிறார்.

**மத்தேயு :** எத்தியோப்பியா என்ற நாட்டில் பட்டயத்திற்கு இரையாகி இரத்த சாட்சியாக மரித்தார்.

**மாற்கு :** இவர் அலெக்சாண்ட்ரியா என்ற பட்டணத்தில் அப்பட்டணத்தின் வீதிகளில் தரையில் இழுக்கப்பட்டு சரீரம், சின்னாபின்னமாகி மரித்தார்.

**லூக்கா :** கிரேக்க நாட்டில் ஒரு ஒலிவ மரத்தில் தூக்கிலிடப்பட்டார்.

**யோவான் :** இவரைக் கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் போடப்பட்டும், அற்புதமாகக் காப்பாற்றப்பட்ட காரணத்தினால் இவர் பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

**பேதுரு :** இவர் ரோம் பட்டணத்தில் தலைகீழாக வைத்து சிலுவையில் அறையப்பட்டார்.

**பெரிய யாக்கோபு :** ஒரு பெரிய கோயிலின் உச்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டு பின்பு தடியினால் அடித்து கொல்லப்பட்டார்.

**பர்த்தொலொமேயு :** உயிரோடு இரண்டு மரத்திற்கு நடுவில் கட்டப்பட்டு, பின்பு இரண்டு மரங்களும் கட்டவிழ்க்கப்பட்டு, உடல் சிதைக்கப்பட்டு சின்னா பின்னமாகி மரித்தார்.

**அந்திரேயா :** ஒரு சிலுவை மரத்தில் கட்டப்பட்ட நிலையிலும், தன்னைக் கொடுமைப்படுத்தியவர்களுக்கு பிரசங்கம் பண்ணிக் கொண்டு மரித்தார்.

**தோமா :** இவர் சென்னையில் விஷ அம்புகள் எய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**யூதா :** இவரும் அம்புகள் எய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**மத்தியாஸ் :** முதலாவது கல்லெறியப்பட்டு, பின்பு சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**பர்னபாஸ் :** இவர் சலனோக்கா என்ற இடத்தில் கல்லெறிந்து கொல்லப்பட்டார்.

**பவுல் :** பலவிதமான சித்திரவதைகளுக்குப் பின்பு ரோம் மன்னன் நீரோவினால் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி. 12 : 1).**

"இவர்கள் அனைவரும் கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள்: பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள், வேறு சிலர் நிந்தைகளையும், அவமானங்களையும், கட்டுகளையும், காவலையும் அநுபவித்தார்கள்" (எபி. 11 : 36, 37).

"இவர்கள் அனைவரும் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்றார்கள். அது மாத்திரமல்ல, இவர்கள் அனைவரும் விசுவாசத்தினாலே ஆண்டவரிடம் நற்சான்று பெற்றார்கள்" (எபி. 11 : 39).

– "உயிருள்ள உதாரணங்கள்" என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# ஒரு முக்கிய வேண்டுகோள்

## தேவை

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/- முதல் ரூ. 5,00,000/- வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகின்றது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ கோவை IBT அலுவலகத்தில் தற்போது பயன்பாட்டிலுள்ள புதிய Website பணிகள் செய்யப்படும் ஒரு கணினி அடிக்கடி பழுது ஏற்படுவதால், உடனடியாக புதிய (Updated) கணினி தேவைப்படுகிறது. இதன் விலை ரூ. 78,000/-. இதற்கு தாங்குநர் கிடைக்க ஜெபியுங்கள்.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. கடந்த செப்டம்பர் மாதம் 15–ஆம் தேதி முதல் 20–ஆம் தேதி வரை, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சட்டிஷ்கார், ஒடிஷா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து 12 மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் மொழிபெயர்ப்புச் சார்ந்த பணிகளைச் செய்யவும், சரிபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும் கோவை IBT மையத்திற்கு வந்திருந்தனர். இவர்களின் பணிகளை மேற்பார்வையிட்டு, தகுந்த ஆலோசனை கொடுப்பதற்காக ஒடிஷாவிலிருந்து IMS மிஷனெரி திருமதி. கிரிஜா ஐசக் அவர்களும் வந்திருந்து, மொழிபெயர்ப்பாளர்களின் பணிகளை ஆய்வு செய்து அடுத்த சில மாதங்களில் அவர்கள் செய்ய வேண்டியதையும் கூறினார்கள். இதற்காக கர்த்தரைத் துதியுங்கள். அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைத் திட்டமிட்டு, அர்ப்பணிப்புடன் செயல்பட ஜெபியுங்கள்.

2. தற்போது மிஷனெரிகளுக்கு ஏற்பட்டுவரும் மனரீதியான உபத்திரவங்கள், தொல்லைகள், மற்றும் உடல்ரீதியான இயலாமை குறித்தும் விளக்கம் கேட்டு, அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும்படியாக MUT ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இதற்காக கர்த்தரைத் துதிப்போம். இவர்கள் பாதிக்கப்பட்ட மிஷனெரிகளை நேரில் சந்தித்து, அவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு IBT சார்பாக திரு. சகாய சுவீடன் மற்றும் திருமதி. சுபீதா சுவீடன் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் IBT-யில் பணிபுரியும் மிஷனெரிகளை கைபேசி மூலமாக தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து MUT அலுவலகத்திற்குத் தெரிவித்தால், அவர்கள் நேரில் வந்து சந்தித்து, தீர்வு காண திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணித் தடையின்றி நடைபெற ஜெபியுங்கள்.

3. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட பெருமழையினால் வட இந்தியாவின் பல மாநிலங்களில் ஏற்பட்ட பலத்த சேதங்கள், உயிரிழப்புகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், ரஷ்யா–உக்ரைன் போர் மற்றும் இஸ்ரேல் பாலஸ்தீனப் போர்களினால் சகலத்தையும் இழந்து நிற்கும் மக்களுக்கு உதவிகள் தாமதின்றி கிடைக்கவும், அடிப்படைத் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் சமாதான வாழ்விற்காக ஜெபியுங்கள்.

4. IBT ஊழியத்தில் புதிய பிரதிநிதிகள் மற்றும் ஊழியபாரமுள்ள முன்னேற்றப் பணியாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

### SEND ALL YOUR CONTRIBUTIONS


**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


### சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by On behalf of | **Mr. K. JAISINGH**<br>**WORD PUBLISHERS TRUST**<br>14, Ashok Layout,<br>Civil Aerodrome Road,<br>Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH**<br>Chandra Prabha Press<br>113-118, V.H. Road, CBE-1. |




### வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBINO282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd October 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**